கடவுளின் நோக்கங்களை நிறைவேற்றுதல்

ஆசீஸ் ராய்சூர்

இலவச விநியோகத்திற்கு மட்டுமே

இந்தியாவின் பெங்களூரு, ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்ட் அவுட்ரீச் தயாரித்து விநியோகித்தது.
முதல் பதிப்பு அச்சிடப்பட்டது: பிப்ரவரி 2018
திருத்தப்பட்ட பதிப்பு: மே 2020
தமிழில் மொழியாக்கம்: ஜூன் 2021

தொடர்பு தகவல்:
319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: bookrequest@apcwo.org
Website: **apcwo.org**

வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால், அனைத்து வேத மேற்கோள்களும் புனித பைபிளான புதிய கிங் ஜேம்ஸ் பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. பதிப்புரிமை © 1982 தாமஸ் நெல்சன், இன்க்., அனுமதியால் பயன்படுத்தப்பட்டது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.
விவிலிய வரையறைகள், ஹீப்ரு மற்றும் கிரேக்க சொற்கள் மற்றும் அவற்றின் அர்த்தங்கள் பின்வரும் ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்றன:

Thayer's Greek Definitions. Published in 1886, 1889; public domain.
Strong's Hebrew and Greek Dictionaries, Strong's Exhaustive Concordance by James Strong, S.T.D., LL.D. Published in 1890; public domain.
Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words, © 1984, 1996, Thomas Nelson, Inc., Nashville, TN.

நிதி பங்குதாரர்

ஆல் பீபிள்ஸ் சர்சீன உறுப்பினர்கள், கூட்டாளர்கள் மற்றும் நண்பர்களின் நிதி உதவி மூலம் இந்த வெளியீட்டின் உற்பத்தி மற்றும் விநியோகம் சாத்தியமானது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் வளப்படுத்தப்பட்டிருந்தால், ஆல் பீபிள்ஸ் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை தயாரித்து விநியோகிக்க உதவ நிதி ரீதியாக பங்களிக்க உங்களை அழைக்கிறோம். தயவுசெய்து apcwo.org/give ஐப் பார்வையிடவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு செய்வது என்பது குறித்து இந்த புத்தகத்தின் பின்புறத்தில் உள்ள “ஆல் பீபிள்ஸ் சுரச்சசுடனான கூட்டாளர்” பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

அஞ்சல் பட்டியலில்

ஆல் பீபிள்ஸ் சர்ச்சிலிருந்தும் இலவச வெளியீடுகள் வெளியிடப்படும்போது அறிவிக்க, நீங்கள் apcwo.org இல் எங்கள் அஞ்சல் பட்டியலுக்கு குழுசேரலாம்.

உள்ளடக்கம்

அறிமுகம் 1
1. மரியாள் மூலம் கடவுள் நிறைவேற்றிய அதியசமான திட்டம் 2
2. உங்களுக்குள் சேர்த்து வைப்பவைகள் 10
3. நம்மைக் குறித்த கடவுளின் நோக்கங்களை ஜெபத்தின் மூலம் பிறப்பித்தல் 15
4. நாம் பேசும் வார்த்தைகள் 20
5. கடின உழைப்பு 23

அறிமுகம்

கடவுள் தம்முடைய நோக்கங்களை இந்த பூமியில் நிறைவேற்ற விரும்பியபோது, அவர் தேவதூதர்களைப் பயன்படுத்தியுள்ளார் என்று வேதாகமம் விளக்குகிறது. ஆனால் பெரும்பாலும், அவர் தன்னுடைய நோக்கங்களை நிறைவேற்ற மனிதர்களைப் பயன்படுத்தியுள்ளதை நாம் பார்க்கலாம். ஆகவே, உங்களைப் போன்ற என்னைப் போன்றவர்கள் மூலமாகவே அவருடைய நோக்கங்களை இந்த பூமியில் நிறைவேற்றுகிறார் என்று நாம் புரிந்துகொள்ளலாம்.

நீங்கள் கடவுளோடு நடக்கும்போது, அவர் இந்த பூமியில் உங்கள் மூலம் நிறைவேற்ற விரும்பும் திட்டங்களையும் நோக்கங்களையும் நீங்கள் தெரிந்துகொள்வீர்கள். அவற்றில் சில நோக்கங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கலாம். குறிப்பாக, ஒரு கன்னிப்பெண் மூலம் தேவனுடைய மகன் இந்த பூமியில் பிறக்கும் தேவ நோக்கத்தை நிறைவேற்றுதல். ஆனால், வேறு சில நோக்கங்கள் அந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்காது. குறிப்பாக, யாரும் கேள்விப்படாத ஒரு தொலைதூர கிராமத்தில் ஒரு நர்சரி பள்ளியை அமைப்பது போன்ற நோக்கம் அவ்வளவு முக்கியத்துவம் உள்ளதாக இருக்காது. ஆனாலும், ஒவ்வொன்றுமே கடவுள் ஒவ்வொரு மனிதர்களைக் கொண்டு இந்த பூமியில் நிறைவேற்ற விரும்புகிற அவருடைய நோங்கங்களாகும்.

இவ்வாறாக பூமியில் கடவுளின் நோக்கங்களை உங்கள் மூலம் எப்படி நிறைவேற்ற விரும்புகிறார் என்பதைப் புரிந்துகொள்ள இந்த புத்தகத்தில் சில முக்கியமான கருத்துகளைத் தொகுத்துள்ளோம். ஆகவே, கடவுளின் நோக்கங்களை உங்கள் வாழ்க்கையின் மூலம் நிறைவேற்ற விரும்புகிறவைகளை கண்டறிந்து நிறைவேற்ற வாழ்த்துக்கள்!

1. மரியாள் மூலம் கடவுள் நிறைவேற்றிய அதியசமான திட்டம்

ஏசாயா 7:14
ஆகையால், கர்த்தர் உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்: இதோ, ஒரு கன்னிப்பெண் கர்ப்பமாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவரை இம்மானுவேல் என்று அழைப்பார்கள்.

மரியாள் மூலம் நிகழ்ந்த அதிசயத்தை நாம் நினைத்துப் பார்க்கும்பொழுது, கடவுள் தம் திட்டத்தை இந்தப்பூமியில் எவ்வாறு நிறைவேற்றுகிறார் என்ற அறிவு நமக்குக் கிடைக்கிறது.

கடவுள் தாம் குறிப்பிட்ட நேரத்தில், தாம் திட்டமிட்டதை இந்த பூமியில் நிறைவேற்றுகிறார்

கடவுளுடைய மகன் இந்த உலகத்தில் பிறப்பது, ஏதேன் தோட்டத்தில் முன்னறிவிக்கப்பட்டது. எப்படியென்றால், "நான் உனக்கும், பெண்ணுக்கும் உன் வித்துக்கும், அவளுடைய வித்துக்கும் இடையே விரோதத்தை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார்; நீ அவருடைய குதிகால் நசுக்குவாய்" என்று ஆதியாகமம் 3:15ல் எழுதப்பட்டுள்ளது.

ஏசாயா போன்ற தீர்க்கதரிசிகளும் அவருடைய வருகையைப் பற்றி கடவுள் மனதில் உள்ளவைகளை அறிந்து மக்களுக்குப் புத்தி சொன்னார்கள். ஆனாலும், அந்த இரட்சகரை இந்த உலகிற்கு அனுப்ப போட்டிருந்த திட்டத்தில் அவர் எந்த அவசரத்தையும் காட்டவில்லை.

அவரைப் பற்றிய தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டு ஏறக்குறைய 4000 ஆண்டுகளுக்குப் பிறகு, "அதாவது அந்த காத்திருப்பின் காலம் முழுமையாக நிறைவேறியபோது, கடவுள் தம்முடைய மகனை

யூத சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவராகப் ஒரு பெண்ணின் கருவிலிருந்து, இந்த பூமியில் பிறக்கச் செய்தார்” (கலாத்தியர் 4:4). ஆகவே, கடவுள் எப்போதும் தனது திட்டத்தை தாம் முன்குறித்த நேரத்தில் பூமியில் நிறைவேற்றுவார். அதுபோலவே, கடவுள் உங்கள் மூலம் நிறைவேற்றத் திட்டமிட்ட தன்னுடைய விருப்பங்கள் ஒவ்வொன்றையும் நிறைவேற்ற வேண்டிய நேரத்தில் மட்டுமே நிறைவேற்றுவார்.

சாதாரண மக்கள் மூலம் நிறைவேற்றப்படும் தேவ திட்டம்

கடவுள் தம்முடைய மகனை இந்த உலகத்திற்கு அனுப்ப விரும்பியபோது, அவர் ஒரு யூத சமுதாயத்தைச் சேர்ந்த மரியாள் என்ற கன்னிப்பெண்ணை தேர்ந்தெடுத்தார். கடவுள் அதுவரை செய்யவிருந்த மிக முக்கியமான திட்டம் உலகமக்களைக் காப்பாற்ற மீட்பரை அனுப்புவது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு ஒரு இளம் கன்னிப்பெண்ணிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதைக் கருத்தில் கொள்வது முக்கியமானது.

அவ்வளவு பெரிய பொறுப்பை நிறைவேற்ற கடவுள் ஒரு வாலிபப் பெண்ணைத் தெரிந்தெடுத்தது எவ்வளவு சிக்கலானது என நாம் நினைக்கலாம்! மரியாளின் வயிற்றில் கருத்தரிக்கப்பட்ட குழந்தைக்கு ஏதாவது நடந்திருந்தால் என்ன செய்வது? அந்தக் குழந்தையை கருக்கலைப்பு செய்ய மரியாள் கட்டாயப்படுத்தப்பட்டிருந்தால் என்ன செய்வது? அவளுக்குக் கருச்சிதைவு செய்திருந்தால் என்ன செய்வது? அல்லது அவள் கல்லெறிந்து கொல்லப்பட்டிருந்தால் என்னவாகும். ஏனெனில், திருமணத்திற்கு முன்பு அவ்வாறு கருத்தரித்தால், அந்த காலகட்டத்தில் கல்லெறிந்து கொல்வது வழக்கம். அப்பொழுது, உலக மக்களை மீட்கப் பிறப்பவருக்கு என்ன நேர்ந்திருக்கும்? இந்த மனித குலத்திற்கு என்ன நடந்திருக்கும்? இவ்வாறாக, தோல்வியின் அனைத்து சாத்தியக்கூறுகளையும் மீறி, ஒரு இளம்

கன்னியிடம் மிகப் பெரிய திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை கடவுள் கொடுத்தார்.

கடவுளால் இதைச் செய்ய முடிந்தால், நிச்சயமாக அவர் வேறு எந்த பொறுப்புக்களையும், அதாவது, உங்கள் மூலம் அவருடைய நல்ல செய்தி பலரிடம் சொல்லுதல், நோயுற்றவர்களைக் குணப்படுத்துதல், கெட்ட ஆவிகளிடம் அடிமையானவர்களை விடுவித்தல், தேசங்களில் காணப்படும் கெடுதல்களைச் சரிசெய்தல் போன்ற பொறுப்புக்களை உங்களிடம் ஒப்படைக்க முடியும். ஆகவே, உங்களையும் என்னைப் போன்ற சாதாரண மக்களிடம் கடவுள் தனது திட்டமிட்ட பொறுப்புக்களை ஒப்படைக்க பயப்படுவதில்லை. உண்மையில், கடவுள் இந்த பூமியில் தனது திட்டங்களை நிறைவேற்ற சாதாரண மக்களையே தேர்ந்தெடுத்துள்ளார்.

மனிதர்களின் பாவத்தின் கலப்பு இல்லாதபடி, சுத்தமான ஆவியானவரால் பிறந்த இயேசு

மரியாளின் வயிற்றில் கடவுளின் மகன் கருத்தரித்தது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு செயலாகும், ஏனெனில், அது முற்றிலும் பரிசுத்த ஆவியானவரின் செயலாகும். கருத்தரித்தல் ஒரு மனித வயிற்றில் நடந்தாலும், அது ஒரு அதிசயம் மூலம் நடந்தது. கருத்தரிப்பின் போது மனித உடலுறவு என்று எதுவும் இல்லை. தேவதூதன் மரியாளிடம், “பரிசுத்த ஆவியானவர் உன் மேல் வருவார், உன்னதமானவரின் சக்தியானவர் உன்மீது நிழல் போல அசைவாடுவார்; ஆகையால், பிறக்க உள்ளவர், பரிசுத்தமான கடவுளுடைய மகன் என்று அழைக்கப்படுவார் (லூக்கா 1:35). இதன்மூலம் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது, கடவுள் நம் மூலமாக செய்ய விரும்பும் ஒவ்வொரு வேலையும் அவருடைய ஆவியானவரால் பிறக்க வேண்டும். அது நமது இயல்பான திறன் மற்றும் ஆற்றல் மூலம் செயல்பட வேண்டியது இருந்தாலும், அது ஆவியானவரால் கருத்தரிக்கப்பட்ட திட்டமாக இருக்க வேண்டும்.

ஒரு உடலில் கருத்தரிக்கப்பட்டவை இன்னொரு உடலை பிறப்பிக்கிறது. ஆனால், ஆவியானவரால் கருத்தரிக்கப்பட்டவை ஆவிக்குரிய ஒன்றைப் பிறப்பிக்கிறது. ஒரு செயலை நமது மனித பகுத்தறிவு, கற்பனை அல்லது புதுமை மூலம் நம் சிந்தையில் கருத்தரித்து அதின்மூலம் செயல்படுவது கடவுளின் படைப்பாக இருக்கமுடியாது, அது எவ்வளவு ஆன்மீகமாகத் தோன்றினாலும். ஒரு செயல் பரிசுத்த ஆவியானவரால் பிறக்கவில்லை என்றால், அது எவ்வளவு ஆன்மீகமாகத் தோன்றினாலும் அது ஒரு நபரின் செயலாகவே இருக்கும். அவ்வாறாக, ஒரு நபரின் செயலை கடவுள் அபிஷேகம் செய்யமாட்டார் (யாத்திராகமம் 30:32).

சங்கடமான சூழ்நிலைகளைச் சந்திக்க நேரிடும்

இந்த உலகின் மனிதர்களை மீட்கிறவரை பெற்றெடுத்த மனித பாத்திரம் மரியாளுக்குக் கிடைத்தது, என்ன ஒரு மரியாதை! ஆனாலும், அவள் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற எவ்வளவு சங்கடமான சூழ்நிலைகளைச் சந்திக்க நேர்ந்தது. ஆம் அவள் ஒரு திருமணமாகாத வாலிபப்பெண், ஆனால் கர்ப்பமாகிவிட்டாள். அவள் கர்பத்தில் கடவுளுடைய மகன். ஆனால் அவள் எப்படி அவரைக் கருத்தருத்தாள் என்ற உண்மையை அவளுடைய குடும்பத்தினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொண்டிருப்பார்களா? பரிசுத்த ஆவியானவரால் எப்படி அவரைக் கர்ப்பத்தில் பெற்றேன் என்று அவர்களுக்கு அவள் விளக்கும்போது, அவள் சொன்னதை அவர்கள் நம்பியிருப்பார்களா? கடவுள் தன்னுடைய மகனை அவள் மூலமாக இந்த உலகில் பிறக்கச் செய்யும்போது, மரியாள் எவ்வளவு ஒரு சங்கடமான சூழ்நிலையைச் சந்திக்க வேண்டியிருந்தது?

நம் அனைவருக்கும் கற்றுக்கொள்ள, இதில் ஒரு பாடம் இருக்கிறது. அதாவது, கடவுள் நமக்கு ஒப்படைத்த பொறுப்பை நாம் தொடர்ந்து செய்து கொண்டிருக்கும்போது, அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதில் பல சங்கடமான சூழ்நிலைகளைச் நாம் சந்திக்க நேரிடலாம். கடவுள் என்ன செய்கிறார்? நம் மூலமாக அவர்

செயல்படுத்தும் பொறுப்புகள் என்ன? என்பது அனைவருக்கும் புரியாது. அவருடைய பொறுப்பை நாம் செய்ததற்காக நாம் சிலரால் வெறுக்கப்பட்டு நிராகரிக்கப்படலாம். நம்முடைய சுயம் சாக நேரிடும் வகையில், பெரும்பாலும் கடவுள் இந்தச் சூழ்நிலைகளைக் கடந்து செல்ல அனுமதிக்கிறார். இதனால் நம்முடைய சுயம் மறைந்து, கடவுளின் மகன் நம்மில் வளர ஏதுவாகிறது. அதாவது, ராஜாவாகிய இயேசுவைப் பற்றி பேசவோ, அவரின் பொறுப்புகளைச் செயல்படுத்துவதைப் பற்றியோ நாம் வெட்கப்படாமல் வாழக் கற்றுக்கொள்கிறோம்.

கடவுளின் தெய்வீகப் பொறுப்புக்களை அவர் பெரும்பாலும் இயல்பான, இயற்கை செயல்முறைகள் மூலம் நிறைவேற்றுகிறார். மரியாளின் வயிற்றில் உருவான குழந்தை இயற்கைக்கு அப்பாற்பட்டது என்றாலும், அவள் அந்தக் குழந்தையை முழு கர்ப்ப காலத்திற்கு சுமக்க வேண்டியிருந்தது. கர்ப்ப காலம் மற்றும் பிரசவம் போன்ற முழு செயல்முறையையும் கடவுள் ஏன் ஒரு அதிசயமாக மாற்றவில்லை? முதல் நாள் கருத்தரிக்கப்பட்டு மறுநாள் குழந்தையாக பிரசவிக்கப்பட்டிருந்தால் அது ஒரு பெரிய அதிசயம் அல்லவா? குழந்தையை முழு காலத்திற்கும் சுமந்து, இயல்பான இயற்கையான பிரசவம் போன்ற கடமையை மரியாள் ஏன் செய்ய வேண்டியிருந்தது? இதில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான பாடம் என்னவென்றால், கடவுள் தன்னுடைய தெய்வீக திட்டங்களை இந்தப் பூமியில் சாதாரண இயற்கை செயல்முறைகள் மூலம் நிறைவேற்றுகிறார். உதாரணமாக, உங்களைக்கொண்டு ஒரு திருச்சபையை எழுப்ப கடவுள் உங்களை அழைத்திருக்கலாம். ஒரு வலுவான உள்ளூர் திருச்சபையை உருவாக்கும் பொறுப்பை அவர் உங்களிடம் கொடுத்திருக்கலாம். அந்த வேலையைச் செய்ய அவர் நிச்சயமாக உங்களை அபிஷேகம் செய்து அந்தப் பொறுப்பை நிறைவேற்றத் தேவையானவைகளை உங்களுக்குக் கொடுத்திருக்கலாம். இருந்தபோதிலும், ஒரு திருச்சபையை உருவாக்க கடினமாக உழைத்தல், கற்பித்தல், பிரசங்கித்தல், விசுவாசிகள் மீதான அக்கறை, திட்டமிடல் மற்றும் ஒழுங்குகளை நியமித்தல் போன்ற

இயல்பான இயற்கையான செயல்முறையை நீங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். உங்கள் இயல்பான இயற்கை முயற்சியால் மட்டுமே கடவுளின் தெய்வீகத் திட்டங்களையும், பொறுப்புக்களையும் நிறைவேற்ற வேண்டியுள்ளது.

நம் தேவைகளை கடவுள் அற்புதமாக சந்திப்பது மற்றொரு உதாரணமாகும். கடவுளுடைய பிள்ளைகளாகிய நாம், நம்முடைய தேவைகளையெல்லாம் அவர் சந்திக்கிறார் என்று நாம் நம்புகிறோம். கடவுள் நம் தேவைகளை அற்புதமாகச் சந்திக்கிறார் என்றும் நாம் நம்புகிறோம். ஆனால், அதே வேளையில் அவர் நம் தேவைகளை எப்படி அற்புதமாகச் சந்திக்கிறார் என்பதை நாம் யோசிக்கத் தவறிவிடுகிறோம். அதாவது, நாம் செய்கிற வேலைகள் மூலமாகவே நம் தேவைகளை அவர் அற்புதமாகச் சந்திக்கிறார் என்று புரிந்துகொள்ளத் தவறிவிடுகிறோம். அதாவது, நாம் வேலைகள் செய்யவேண்டியது இருக்கும் அதே வேளையில் நமக்குரிய தேவைகளை அவர் அற்புதமாகச் சந்திக்கிறார். உதாரணத்திற்கு உங்களுக்குக் கிடைத்த வேலைகூட ஒரு அற்புதமாக இருக்கலாம். அந்த வேலை மூலம் உங்களுடைய தேவைகள் சந்திக்கப்படுவது மேலும் அற்புதமாக இருக்கலாம்.

மூடிய கதவுகளை எதிர்கொள்ள நேரிடலாம்

பின்பு, அவளுக்கு தலைப் பிள்ளையாக ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அவர்கள் அங்கு தங்குவதற்கு, இடம் கிடைக்காதபடியால், அந்தக் குழந்தையை ஒரு துணியால் சுற்றி, மாட்டுக்கொட்டகையில், மாடுகளுக்குத் தீனிபோடும் இடத்தில் படுக்கவைக்கும் சூழ்நிலை அவளுக்கு ஏற்பட்டது.” என்று வேதம் சொல்கிறது (லூக்கா 2:7). பெத்லகேமில் எத்தனை பயணிகள் தங்கும் விடுதிகள் இருந்தன என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால், மரியாளும் யோசேப்பும் பல விடுதிகளில் நிறுத்தி, தங்குவதற்கு என்று ஒரு அறையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அல்லது அவர்கள் சென்ற இடங்களில் அறைகள் காலியாக இல்லை, எனவே விடுதியின் பராமரிப்பாளர் அவர்களை

விடுதி மேலாளரைச் சந்திக்க அனுப்புகிறார். இந்த பிரபஞ்சத்தின் கடவுள் தனது மகனின் பிறப்புக்கு குறைந்தபட்சம் ஒரு அறையையாவது இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் ஏற்பாடு செய்ய முடியவில்லையா? என்று, மரியாளின் மனதில் ஓடிய எண்ணங்களை நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியுமா? “கடவுள் எங்களுக்கு ஒரு அறையை தயார் செய்து வைத்திருப்பார் ஏனெனில், நான் சுமக்கும் குழந்தை கடவுளின் மகன் அல்லவா? ஆகவே, பயணிகள் தங்கும் விடுதியில் எங்களுக்கு என்று ஒரு இடம் நிச்சயம் இருக்கும்” என்று அவள் நினைத்திருக்கலாம். ஆனாலும், குழந்தை எங்கு பிறக்க வேண்டும் என்று கடவுள் தீர்மானித்திருந்த இடத்திற்கு அவர்கள் வரும் வரை, அவர்கள் தட்டிய தங்கும் விடுதிக் கதவுகள் ஒவ்வொன்றும் மூடியதாகவே இருந்தது. எனவே, நம்மைக் குறித்த கடவுளின் திட்டங்களை நாம் இந்த பூமியில் நிறைவேற்ற முயற்சிக்கும்பொழுது, பலமுறை மூடிய கதவுகளை எதிர்கொள்ள நேரிடும். ஆகவே, நம்மைக் கொண்டு கடவுள் செய்ய நினைத்த அந்தத் திட்டம் சரியானது இல்லையோ என்று குழம்பத் தேவையில்லை. மாறாக, நம் மூலம் கடவுள் செய்ய நினைத்த வேலையை எங்கு எப்படிச் செய்ய வேண்டுமோ, அந்த இடத்திற்கு நாம் வரும் வரை, நாம் தொடர்ந்து பயணம் செய்து, தட்டவேண்டிய கதவுகளைத் தட்டிக்கொண்டே இருக்க வேண்டும்.

மரியாளைப் போல, பரிசுத்த ஆவியானவரால் கடவுளின் வேலையை தங்கள் ஆவியில் கருத்தரித்த பலர் உண்மையிலேயே இருக்கிறார்கள். இருப்பினும், கடவுள் விரும்பும் இடத்திற்கு அவர்கள் வரும் வரையில் அவர்களால் அந்த வேலையைப் பிரசவிக்க முடியாது. மரியாள் பிரசவிக்க இடம் கிடைக்காமல் பல இடங்களுக்குச் சென்றது போலவே, கடவுள் விரும்பும் இடத்திற்கு அவர்கள் வரும் வரை பல இடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கும். ஆகவே, நம் மூலமாக கடவுள் செய்ய நினைத்த வேலையை நாம் செய்வதற்கு முன்பு, சரியான இடத்தில் நாம் இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

பாதுகாக்கப்பட்டு, கவனித்து வளர்க்கப்பட வேண்டும்

மற்ற குழந்தைகளைப் போலவே ஒரு குழந்தையாக, இயேசுவும் வளர வேண்டியிருந்தது (லூக்கா 2:40). இயேசு பிறந்தவுடனேயே தானாக சாப்பிடவோ, தானாக உடை உடுத்திக்கொள்ளவோ இல்லை. மாறாக, எல்லா தாய்மார்களைப் போலவே, மரியாளும் அவருக்குப் பால்கொடுத்து, பராமரித்து வளர்க்க வேண்டியது இருந்தது. இயேசு ஒரு குழந்தையாக இருந்தபோது, ஏரோது ராஜா குழந்தையை கொல்ல முயன்றதால், யோசேப்பும் மரியாளும் பெத்லகேமை விட்டு எகிப்துக்குத் தப்பித்துச் சென்று அவருடைய உயிரைப் பாதுகாக்க வேண்டியிருந்தது (மத்தேயு 2:12-16). "இது கடவுளின் மகன்தானே. ஆகவே அவர் தன்னைத்தானே பாதுகாத்து, பராமரித்து, வளர்ந்துகொள்வார்" என்று மரியாளும் யோசேப்பும் குழந்தையை அப்படியே விட்டுவிடவில்லை, தேவனுடைய குமாரனைப் பெற்றெடுப்பது மட்டுமல்லாமல், அவரை வளர்ப்பது, பராமரிப்பது, பாதுகாப்பது போன்ற பொறுப்பும் மரியாளுக்கு இருந்தது. அதுபோலவே, நம் மூலம் கடவுள் செய்ய நினைக்கும் வேலையிலும் நம் பொறுப்புக்கள் இருக்கிறது. கடவுள் நம் மூலம் செய்ய நினைக்கும் ஒவ்வொரு வேலையும் வளர, அது பராமரிக்கப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும். பிறந்த குழந்தையை வளர்க்க, பராமரிக்க, பாதுகாக்க ஒரு தாய் பொறுப்பேற்பது போலவே நம் மூலம் கடவுள் செய்ய நினைக்கும் வேலையை நாம் கவனித்துக்கொள்ள பொறுப்பேற்க வேண்டும், அதற்கு உணவளித்து பராமரிக்க வேண்டும், பாதுகாக்க வேண்டும். நம் மூலமாக கடவுள் செய்ய நினைக்கும் வேலையை அழிக்க பிசாசையோ தீய நோக்கங்களைக் கொண்டவர்களையோ நாம் ஒருபோதும் அனுமதிக்க கூடாது.

நம் மூலம் கடவுளின் செய்ய நினைப்பவைகளைப் புரிந்து அதைச் செயல்பாட்டில் கொண்டுவர தேவையான நான்கு கூறுகளை பின்வரும் அத்தியாயங்களில் பார்க்கலாம்:

2. உங்களுக்குள் சேர்த்து வைப்பவைகள்

நமக்குள் ஒன்றை வைத்து இந்த உலகில் பிறக்கச் செய்து, அதின் மூலமாகவே அவர் நம்மைக்கொண்டு செய்ய நினைத்தவைகளைச் செய்ய விரும்புகிறார்.

நம்மைக் கொண்டு இந்த பூமியில் செய்ய கடவுள் நினைத்துள்ளவைகளைச் செய்வதற்குத் தேவையான சக்தி, திறமைகளை நமக்குள்ளேயே வைத்திருக்கிறார்.

மத்தேயு 12:33-37
33 ஒரு மரத்தில் காய்க்கும் காய்கள், பழங்களின் ருசியை வைத்தல்லவா அந்த மரம் நல்ல மரம் அல்லது கெட்ட மரம் என்று சொல்லமுடியும். அதுபோலவே, என் வாழ்வை ருசிபார்த்து, நான் நல்லவன் அல்லது கெட்டவன் என்று சொல்லுங்கள்.
34 ஆனால், ஆதி மனிதனை ஏமாற்றிய பாம்பின் சந்ததியாக நீங்கள் வாழ்வதால், உங்கள் உள்ளம் கெட்ட சிந்தைகளால் நிறம்பி இருக்கிறது.
பின்பு எப்படி உங்களால் நல்லவைகளப் பேசமுடியும்? 35 ஒரு மனிதனின்
உள்ளத்தில் நல்ல சிந்தனைகள் நிறைந்து இருந்தால், அவன் நல்லவைகளைப் பேசுகிறான். கெட்ட சிந்தைகள் நிறைந்து இருந்தால்,
அவன் கெட்டவைகளைப் பேசுகிறான். 36 ஆனால் உண்மை என்னவென்றால்,
மனிதர்களுடைய குற்றங்குறைகளை கடவுள் விசாரிக்கும்பொழுது, ஒவ்வொருவரும் பேசின பேச்சின் அடிப்படையில், விசாரணை நடக்கும்.
37 கடவுள் பார்வையில் நீ நேர்மையானவன் என்பதும், குற்றவாளி என்பதும் அன்றைய நாளில் தெரியும்.

ஒரு நல்ல மனிதன், தன் நல்ல இருதயமாகிய பொக்கிஷத்தில் இருந்து நல்ல காரியங்களை வெளிப்படுத்துகிறான். இவ்வாறாக நமக்குள் இருந்து என்ன வெளியே வருகிறதோ, அது நமக்குள் என்ன இருக்கிறது என்று வெளிப்படுத்துகிறது. நம் இதயத்தில் நல்லவைகள் இருந்தால், நல்ல விஷயங்கள் வெளியே வரும். நம்

இதயத்தில் கெட்ட விஷயங்கள் இருந்தால், கெட்ட காரியங்களை வெளியே வரும். இவ்வாறாக, நாம் செய்கிறவைகள் நமக்குள் என்ன இருக்கிறது என்று வெளிப்படுத்துகிறது.

மத்தேயு 7:15-20
**15 நானும் கடவுள் மனதை அறிந்து புத்திசொல்கிறவன் என்று
பொய்சொல்லுகிறவர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில்,
அவர்கள் பேசுவதைக் கேட்டால் உங்களுக்கு அவர்கள்
பொய்சொல்லுகிறவர்களாகத் தெரியாது. ஏனெனில், ஆடுகளைப் பிடித்து
சாப்பிட வருகிற ஓனாய்கள், ஆட்டைப் போல வேஷம் போட்டுக்கொண்டு
வருவதுபோல அவர்கள் நல்லவர்களாக நடிப்பார்கள்.**
**16 ஏனெனில், முள்செடிகளில், திராட்சைப் பழங்களையோ, அத்திப்
பழங்களையோ எப்படிப் பார்க்க முடியும்? ஆகவே, கடவுளோடு இணைந்து
வாழ்கிறேன் என்று அவர்கள் சொல்லுகிற அளவுக்கு, அவர்கள்
நடத்தையிலும், செயலிலும் நல்ல மாற்றங்கள் வந்திருக்கிறதா? என்பதைக்
கவனித்துப் பார்த்தால், நீங்கள் அவர்களைப் புரிந்துகொள்ளலாம்.**
**17 ஆகவே, ஒரு மரத்தின் தன்மைகளை வைத்தே அதின் பழங்கள் இருக்கும்;
நல்ல மரங்களில் நல்ல பழங்களும், கெட்ட மரங்களில் கெட்ட பழங்களுமே
கிடைக்கும்.**
**18 மரம் கெட்டுப்போனதாக இருந்தால், அதில் நல்ல பழத்தைத் தேடிப் பலன்
இல்லை; ஒரு மரம் நல்ல தன்மையோடு இருந்தால், அது கெட்ட
பழங்களைக் கொடுக்க முடியாது.**
**19 ஆகவே, நல்ல பழங்களைக் கொடுக்காத மரங்களையெல்லாம் வெட்டி
எடுத்து, தீ வைப்பார்கள்.**
**20 ஆகவே, ஒவ்வொருவர் நடத்தைகள், செயல்களை வைத்து, அவர்கள்
நல்ல மரமா, கெட்ட மரமா என்பதை புரிந்துகொள்ளுங்கள்.**

இங்கே பரிசேயர்களுடன் இயேசு உரையாடுகிறார். பரிசேயர்கள் “நல்ல பழம்” இருந்தால், அந்த மரம் நல்ல மரம்” என்று கருதினர். ஆனால், இயேசுவின் உரையாடல் மூலம் உண்மையில் மரம் நன்றாக இருந்தால் மட்டுமே அதன் பழம் நன்றாக இருக்கும். ஒரு மரத்தின் தன்மையே அது தரும் பழம் எப்படிப்பட்டது என்று தீர்மானிக்கிறது என்ற உண்மையை இயேசு சுட்டிக்காட்டினார். அதுபோலவே, நம் உள்ளத்தில் இருக்கும் சிந்தைகள்தான் நாம் எப்படிச் செயல்படுகிறோம், பேசுகிறோம் என்பதைத் தீர்மானிக்கிறது. நமக்குள் உள்ளவை நம் வாழ்வின் மூலம்

வெளிப்படுகிறது. ஆகவே, கடவுள் நமக்குள் என்ன வைத்துள்ளாரோ, அதைத் நம்முடைய செயல்கள் மூலம் வெளியே கொண்டுவர விரும்புகிறார். எனவே, நாம் ஏற்கனவே நமக்குள் எதைச் சேர்த்து வைத்துள்ளோம், தொடர்ந்து நமக்குள் எதைச் சேர்த்து வைக்கிறோம் என்பது மிகவும் முக்கியம்.

நமக்குள் எப்படிச் சேர்த்து வைக்கிறோம்?

கடவுள் நம் வாழ்வில் தன்னுடைய நல்லவைகளைச் சேர்த்து வைக்கிறார்

யோவான் 3:27
யோவான் அவர்களுக்குப் பதிலாக, "மேல் உலகிலிருந்து கடவுள் ஒருவருக்கு ஒன்றைத் தன் விருப்பப்படி கொடுக்காவிட்டால், அவரால் அதைச் செய்ய முடியாது.

நம் உள்ளத்தில் கடவுள் நல்லவைகளைச் சேர்த்து வைக்கமுடியும். நமக்குள் சேர்த்துவைக்கப்பட்ட நல்லவைகள் அனைத்தும் கடவுளுடையதாகும். நம்மிடம் இருக்கும் நல்லவைகள் அனைத்தும் அவரிடமிருந்து வந்ததாகும். கடவுள் தன் வேலைக்கு என்று நம்மைத் தேர்வு செய்தால், நம் வாழ்வில் இல்லாத, வரங்கள், அபிஷேகம் மற்றும் பிற திறமைகளை அவர் நமக்குள் சேர்த்து வைக்க முடியும்.

மற்றவர்களும் நம் வாழ்வில் பல விஷயங்களை சேர்த்து வைக்கமுடியும்

நீதிமொழிகள் 27:17
ஒரு இரும்பு இன்னொரு இரும்பைக் கூர்மைப்படுத்துவது போல, ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடமிருந்து கற்றுக்கொள்ள முடியும்.

இந்த வசனத்தின் அடிப்படையில், நாம் யாருடன் அதிகம் பழகுகிறோமோ, அவர்களுடைய நல்ல குணங்களையோ அல்லது

கெட்ட குணங்களையோ கற்றுக்கொண்டு அதை நமக்குள் சேர்த்து வைக்கிறோம். மோசேயோடு யோசுவா பழகும்படி கடவுள் ஒரு உறவை அமைத்தார் என்று உபாகமம் புத்தகத்தில் படிக்கிறோம் (உபாகமம் 1:38). நீ யோசுவாவை ஒரு தலைவனாக ஏற்படுத்து என்று கடவுள் மோசேயிடம் சொன்னார் (எண்ணாகமம் 27:18-23). அதின்மூலம் கடவுள் மோசேக்குக் கொடுத்த அபிஷேகம் யோசுவாவுக்குப் போய்ச்சேர்ந்தது. மோசே யோசுவா மீது கை வைத்து கடவுளிடம் வேண்டியபொழுது, அவருக்குள் இருந்த ஞானத்தின் ஆவியானவர் யோசுவாவிடம் போய்ச் சேர்ந்தது. (உபாகமம் 34:9). இவ்வாறாக ஒருவரிடம் கடவுள் கொடுத்தது, இன்னொருவருக்குப் போய்ச் சேருகிறது. இதுபோலவே, ஒருவரிம் உள்ள நல்ல குணங்கள் மற்றவர்களிடம் வரலாம். எனவே, நாம் யாருடன் அதிக நேரத்தை செலவழிக்க வேண்டும் என்பதை நன்கு யோசித்துச் தேர்வுசெய்ய வேண்டும். அதின்மூலம் அவர்களிடமுள்ள நல்ல குணங்களை நம் வாழ்க்கையில் பெற்று சேர்த்துக்கொள்ளலாம்.

நாமாகவே நம் வாழ்க்கையில் நல்லவைகளைச் சேர்த்து வைத்துக்கொள்ளலாம்

நீதிமொழிகள் 4:23
நீ உன் உள்ளத்தில் என்னென்ன நினைக்கிறாய் என்பதில் கவனமாக இரு. ஏனெனில், உன் நினைவுகள்தான் உன் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது.

ஆகவே, எவையெவைகளை நம் உள்ளத்தில் நாம் சேர்த்துவைக்க வேண்டும் என்று நாமே தீர்மானிக்க முடியும். கடவுளுடைய வார்த்தைகளைத் தொடர்ந்து படிப்பதன் மூலமும், குறிப்பிட்ட சில நபர்களுடன் நேரத்தைச் செலவிடுவதன் மூலமும், குறிப்பிட்ட சில பயிற்சியினாலும் நாம் நம் உள்ளத்தில் எவைகளைச் சேர்த்து வைக்கிறோம் என்று நாமே தீர்மானிக்கிறோம். அவ்வாறாக, நமக்குள் நாம் நல்லவைகளைச் சேர்த்து வைக்கும்பொழுது, நம் வாழ்வை நல்ல நிலையில் வைக்கவும், நம்மைக் குறித்து கடவுள்

விரும்புகிறவைகளைச் செய்யவும் நம்மை நாமே தகுதிப்படுத்திக் கொள்கிறோம்.

கடவுள் நம்மைக் கொண்டு எவைகளை செய்ய விரும்புகிறார் என்று நாம் புரிந்துகொள்ளத் தொடங்குகையில், அவ்வாறாக நம் உள்ளத்தில் சேர்த்துவைத்த பொக்கிஷங்கள் மூலம் கடவுளின் வேலைகளை நாம் சிறப்பாகச் செய்ய முடிகிறது. அதாவது, அவர் நமக்கென கொடுத்த வேலைகளைச் செய்வதற்குத் தேவையான வரங்களை நாம் அவரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்வதன் மூலமோ அல்லது குறிப்பிட்ட நபர்களோடு நேரத்தை செலவிட்டு அவர்கள் மூலம் அந்த வரங்களைப் பெறுவதின் மூலமோ அல்லது தேவையான பயிற்சிகளை பெறுவதன் மூலமோ, அவர் நம்மைக் கொண்டு செய்ய திட்டமிட்டவைகளை நாம் செய்யமுடியும்.

ஆனால், அதற்கானவைகளை நாம் நமக்குள் சேர்த்து வைப்பதின் மூலமாகவே, அவைகள் நமக்குள் இருந்து அந்த வேலைகள் மூலம் வெளிவருகிறது. ஏற்கனவே நம்மில் சேர்த்து வைக்கப்படாத ஒன்றை நாம் நிச்சயம் வெளியே கொண்டுவர முடியாது. உதாரணமாக, நீங்கள் ஒரு திருச்சபை போதகராக இருந்தால், ஒரு புதிய திருச்சபையைத் துவங்கியிருந்து, அது ஆவிக்குரிய வளர்ச்சியடையவும், எண்ணிக்கையில் பெருகவும், வலிமையுள்ளதாகவும் கடவுள் விரும்புகிறார். ஆனால், அதைச் செய்வதற்கு நீங்கள் எவையெவைகளை உங்கள் உள்ளத்திற்குள் சேர்த்து வைக்கவேண்டும் என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். கடவுளுடைய வார்த்தைகளை அதிக அதிகமாக நீங்கள் உங்களுக்குள் சேர்த்து வைக்கவேண்டும், கடவுளின் அபிஷேகத்தில் வளர வேண்டும், திருச்சபை மக்களை வழிநடத்தவும், மேற்பார்வை செய்யவும் தேவையான பயிற்சிகளைப் பெற வேண்டும். இவைகள் அனைத்தையும் உங்களிடத்தில் அதிகமதிகமாக சேர்த்து வைப்பதால், உங்களைக் கொண்டு தேவன் கட்ட நினைத்த திருச்சபையை உங்கள் மூலம் செய்து முடிக்க முடியும்.

3. நம்மைக் குறித்த கடவுளின் நோக்கங்களை ஜெபத்தின் மூலம் பிறப்பித்தல்

கடவுள் நம்மைக் கொண்டு செய்ய நினைத்துள்ள அவருடைய நோக்கங்களை ஜெபத்தின் மூலம், நாம், நம் வாழ்வில் பெற்றெடுக்கிறோம். அதாவது, நம்மைக் குறித்த அவருடைய நோக்கங்களை, நம் வாழ்வில் செயல்முறையில் கொண்டுவருவதற்கு ஜெபம் ஒரு கருவியாக செயல்படுகிறது.

ஏனெனில், ஜெபத்தின் மூலமே, கடவுள் உங்களைக் கொண்டு என்ன செய்ய நினைக்கிறார் என்று நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள்

1 கொரிந்தியர் 2:9-10

9 ஆகவேதான், அவருடைய புத்தகத்தில், கடவுளிடத்தில் அன்பாயிருக்கிறவர்களுக்கு அவர் ஆயத்தம்பண்ணி வைத்துள்ள சிறப்பானவைகளை, "இதுவரை ஒரு கண்ணும் பார்த்ததில்லை; ஒரு காதும் கேட்டதில்லை;" இதுவரை எவர் மனதிலும் அது தோன்றியதில்லை" என்று எழுதியுள்ளது.

10 ஆனால், நமக்கோ அவைகளை தம்முடைய ஆவியானவரால் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்; ஏனெனில், கடவுளுடைய ஆவியானவர், கடவுளுடைய மனதிற்குள் உள்ளவைகள் முதற்கொண்டு, அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கிறார்.

1 கொரிந்தியர் 14:2

ஏனெனில், பரிசுத்த ஆவியானவர் தரும் வரத்தினால், தனக்கு தெரியாத மொழியில் பேசுகிற ஒருவர், மற்ற மனிதர்கள் அதைப் புரிகிற விதத்தில் பேசாமல், கடவுளுடைய காரியங்களைக் மறைமுகமாகவே பேசுகிறார். ஆகவே, அவர் பேசுகிறதை கேட்கிற மற்ற மனிதர்களால், அவர் என்ன பேசுகிறார் எனப் புரிந்துகொள்ள இயலுவதில்லை.

மனித இனத்திற்கான கடவுளின் பொதுவான திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் தவிர, நம் ஒவ்வொருவருக்கும் கடவுள் ஒவ்வொரு திட்டங்களையும் நோக்கங்களையும் வைத்துள்ளார். "ஆனால், இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் வாழ்ந்தபோது எப்படியெல்லாம் நல்லவராக வாழ்ந்தாரோ, அதுபோலவே நாமும் வாழவேண்டும் என்ற எண்ணத்தில்தான், அவரோடு இணைத்து, நம்மை புதியதாக உருவாக்கியுள்ளார்" (எபேசியர் 2:10). நம்மில் பலருக்கு, நம்முடைய வாழ்க்கைக்கான கடவுளின் நோக்கங்கள் மிகவும் வெளிப்படையாகத் தெரியமால், கிட்டத்தட்ட ஒரு மர்மம் போன்றே இருக்கிறது. இருப்பினும், கடவுளின் ஆவியானவர், அவர் மனதில் உள்ளதை தெரிந்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் கடவுளாகையால், அவருடைய அனைத்து திட்டங்களையும் நோக்கங்களையும் முழுமையாகவும், ஆழமாகவும் அறிந்திருக்கிறார், ஏனென்றால், ஆவியானவரும் கடவுள்தான். ஆகவே, அந்த பரிசுத்த ஆவியானவர்தான், நம்மைக்குறித்த கடவுளின் திட்டங்களையும் நோக்கங்களையும் நமக்கு வெளிப்படுத்துகிறார். இது பெரும்பாலும் நம் ஜெபிக்கும்போதே நமக்கு வெளிப்படுத்தப்படுகிறது.

ஆவியில் நீங்கள் ஜெபிக்கும்போது, கடவுளின் நோக்கங்களை உங்கள் வாழ்வில் நிறைவேற்ற நீங்கள் ஜெபிக்கிறீர்கள்

அந்நியபாஷைகளில் ஜெபிப்பதன் மூலம் அதாவது ஆவியில் நீங்கள் ஜெபிப்பதின் மூலம் கிடைக்கும் சக்தி என்னவென்றால், நாம் “மர்மங்களை” ஜெபிக்கிறோம். அதாவது, நாம் ஆவியில் ஜெபிக்கும்போது, நம்முடைய சொந்த வாழ்க்கைக்கான கடவுளின் திட்டங்களையும் நோக்கங்களையும் நிறைவேற்ற ஜெபிக்கிறோம். ஒருவேளை ஜெபிக்கும் அந்த நேரத்தில் அது ஒரு மர்மமாகவோ அல்லது நமக்கு மறைக்கப்பட்ட ஒன்றாகவோ இருக்கலாம்.

கடவுள் நம் மூலம் செய்ய விரும்பும் விஷயங்களை நாம் ஜெபிக்கும்போது, நமக்கு வெளிப்படுத்துகிறார். ஒரு பெண் எப்படி கருத்தரிக்கிறாளோ, அதுபோலவே, நாம் ஜெபிக்கும்போது, கடவுள் நம்மைக் கொண்டு செய்ய நினைக்கும் நோக்கங்களை நம் ஆவியில் கருத்தரிக்கிறோம். மேலும் நம்மைக் குறித்த கடவுளின் நோக்கங்கள் நம்முடைய ஆவி உலகில் உருவம் பெறுகிறது. ஒருவேளை நம்மைக் குறித்த அவருடைய நோக்கங்கள் அப்பொழுதே நிறைவேறாமல் இருக்கலாம். ஆனால், கருத்தரித்த காலத்திலிருந்து பிரசவம் வரை, கர்ப்ப காலம் என்று ஒன்று இருப்பதுபோல, நம்மைக் குறித்த கடவுளின் நோக்கம் பற்றிய ஒரு வளர்ச்சி, கண்ணுக்கு தெரியாத நம்முடைய ஆவி உலகில் நடைபெறுகிறது. நாம் ஆவியில் ஜெபிக்கும்போது இதுதான் நடைபெறுகிறது. நம்முடைய கண்களுக்குக் காணக்கூடிய விதத்தில் எந்த மாற்றத்தையும் நாம் பார்க்காமல் இருக்கலாம். ஆனால், நம்மைக் குறித்த கடவுளின் நோக்கங்கள் இந்த பூமியில் நிறைவேறும் நாட்கள்வரை, அது நம் ஆவி உலகில் ஒரு உருவம் பெறுகிறது. ஆகவே, நமக்கு ஒரு யோசனை அல்லது தரிசனத்தைக் கடவுள் தரும்பொழுது, அதுகுறித்து நாம் தொடர்ந்து ஜெபிக்கும்பொழுது, நம் மூலம் அதை எப்படிச் செய்ய விரும்புகிறார் என்று நமக்கு வெளிப்படுத்துகிறார். சரியான நேரத்தில், அதாவது அதை நிறைவேற்றும் அவருடைய நேரம் முழுமையடையும்பொழுது, நம்மைக் குறித்த அவருடைய நோக்கங்களை இந்த பூமியில் நிறைவேற்றுகிறார்.

உங்கள் விருப்பங்களை, கடவுளின் விருப்பங்களோடு ஜெபம் ஒருங்கிணைக்கிறது

எபிரேயர் 5:7-9

7 இயேசு ஒரு உடலோடு இந்த பூமியில் வசித்த நாட்களில், தன்னை மரணத்திலிருந்து காப்பாற்ற வல்லமையுள்ள தன் அப்பாவிடம் அழுது, சத்தத்தோடு வேண்டுதல் செய்தார். அவ்வாறு அவர் தன் அப்பாவாகிய கடவுளின் மேல் தனக்கிருந்த மரியாதையையும் பயபக்தியையும் காட்டியபடியால், அவர் செய்த வேண்டுதல்களை கடவுள் கேட்டார்.

8 கடவுளுடைய மகனாக அவர் இருந்தபோதிலும், அவருக்கு எப்படிக் கீழ்படிந்து வாழவேண்டும் என்று அவருக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் மூலமே கற்றுக்கொண்டார்.
9 இவ்வாறாகவே, ஒரு குறையும் இல்லாத முதன்மை பூசாரியாக வேலை செய்யும் தகுதியை அவர் பெற்றார். அதின் மூலமாகவே, அவருக்குக் கீழ்படிந்து வாழும் ஒவ்வொருவரையும் நித்திய அழிவிலிருந்து அவர் காப்பாற்றுகிறார்.

மத்தேயு 26:38-39,42
37-38 "பேதுரு, யாக்கோபு, யோவான், நீங்கள் மூவர் மட்டும் என்னோடு வாருங்கள்" என்று சொல்லி, அங்கிருந்து கொஞ்ச தூரம் அவர்களைக் கூட்டிக்கொண்டு போனவுடன், "நீங்கள் மூவரும் இங்கேயே இருங்கள்! நான் மரணத்தை சந்திக்க இருப்பதால், எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது! ஆகவே, தூங்காமல் என்னோடு கூட கொஞ்ச நேரம் கண்விழித்துக்கொண்டு இங்கேயே இருங்கள்" என்று சொன்னார்.
39 பின்பு, அங்கிருந்து மேலும் கொஞ்சத்தூரம் போய், முழங்கால் போட்டு, "அப்பா! எனக்கு வரப்போகிற இந்த கஷ்ட நேரத்தை நான் தவிர்க்க முடியுமானால், அந்தக் கஷ்டம் எனக்கு வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஆனாலும், உங்கள் விருப்பம் எதுவோ அதுவே நடக்கட்டும். நான் விரும்புகிறதற்காக எதையும் செய்ய வேண்டாம்" என்று சொல்லி கடவுளிடம் வேண்டுதல் செய்தார்.
42 அங்கிருந்து, கடவுளிடம் வேண்டுதல் செய்த அந்த இடத்திற்கு போய், "என் அப்பாவே! இந்த கஷ்டத்தை நான் அனுபவிப்பது, உங்கள் விருப்பமானால், நீங்கள் ஆசைப்பட்டது என் வாழ்வில் நடக்கட்டும்" என்று சொல்லி வேண்டுதல் செய்தார்.

கடவுளுடைய மகனே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ள வேண்டுமா! என்பது நம் மனதில் புரிந்துகொள்ள கடினமான ஒன்றாக இருக்கிறது. ஆனாலும், அப்பாவாகிய கடவுள் மீது மகனாகிய கடவுளுக்குத் “தெய்வீக பயம்” அல்லது “தெய்வபக்தி” இருந்தது என்பதை மேலே உள்ள வசனங்கள் நமக்கு தெளிவுபடுத்துகின்றன. கெத்செமனே தோட்டத்தில், இயேசு தன்னை மரணத்திற்கு அர்ப்பணித்து, கடுமையான வேதனையோடும், கூக்குரல்களோடும், அப்பாவாகிய கடவுளோடு நேருக்கு நேர் பார்த்து வேண்டுதல் செய்தபோதுதான், தன்னுடைய விருப்பங்கள் எதுவும் வேண்டாம், “அப்பா உங்கள் விருப்பம் மட்டுமே நடக்கட்டும்!” என்று சொல்லி, தன்னுடைய மரணத்திற்கு ஒத்துக்கொண்டு, கீழ்ப்படிகிறார்.

ஆகவே, நம்முடைய வாழ்க்கையிலும், பெரும்பாலும், நாம் ஜெபிக்கும்போது, நம்முடைய விருப்பங்களை கடவுளின் விருப்பங்களுக்கு விட்டுக்கொடுக்காமல் ஜெபிக்கலாம். ஆனால், அப்பாவின் சமூகத்தில் நாம் ஜெபத்தில் நேரங்களைச் செலவு செய்யும்போது, நம்முடைய சொந்த விருப்பங்களை, அவருடைய விருப்பங்களோடு முழுமையாக இணைத்துக்கொண்டு, "ஆண்டவரே, உம்முடைய விருப்பங்கள் எதுவோ அதுமட்டும் நடக்கட்டும்" என்று சொல்வோம்.

ஆகவே, நம்மைக் குறித்த கடவுளின் நோக்கங்களை ஜெபம் நம்மில் பிறப்பிப்பது மாத்திரமல்ல, அதை நம் உள்ளத்திற்குள் வளரச்செய்து, நம் விருப்பங்களைத் தவிர்த்து கடவுளின் விருப்பங்களோடு இணையச்செய்து, அதை நடைமுறையில் செயல்படுத்தவும் ஜெபம் பெரிதும் உதவுகிறது. மேலும் ஜெபத்தின் மூலமாகவே, நம்மைக் குறித்த கடவுளின் நோக்கங்களை நாம் இந்த பூமியில் நிறைவேற்றுகிறோம்.

4. நாம் பேசும் வார்த்தைகள்

அனேக நேரங்களில் நாம் பேசும் வார்த்தைகள் கடவுளின் விருப்பத்தையும் நோக்கத்தையும் இந்த பூமியில் நிறைவேற்ற ஒரு கருவியாகப் பயன்படுகிறது. நாம் பேசும் வார்த்தைகள் நமது நிகழ்காலத்தில் மாத்திரமல்ல, எதிர்காலத்திலும் தாக்கத்தை ஏற்பருத்துகிறது.

ஆகவே, உங்களைப் பற்றி கடவுளின் நோக்கங்களை உங்கள் வாழ்க்கையில் செயல்படுத்தும் வார்த்தைகளைப் பேசுங்கள்

யாக்கோபு 3:6

எப்படியெனில், மனிதர்களாகிய நமக்குள்ளே எவ்வளவு கெடுதல்கள் நிறைந்திருக்கிறது என்று நம் பேச்சு வெளிப்படுத்துகிறது. நம் இருதயத்தில் உள்ள கெட்ட சிந்தைகள் பேச்சாக வெளிவரும்பொழுது, நம் வாழ்க்கை முழுவதையும் அது தீட்டாக்குகிறது. அவ்வாறு நம்மைப் பேச வைப்பதும் பாதாள குழியின் சாத்தானாகும். ஒரு சிறு நெருப்பு முழுக்காட்டைக் கொழுத்துவதுபோல, அவ்வாறான பேச்சு அநேகர் வாழ்வை கெடுத்து அழிக்கிறது.

சிறிய நெருப்பு, பெரிய அழிவுக்கு காரணமாகிறதுபோலவே, நம்முடைய பேச்சும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று இந்த வசனம் போதிக்கிறது. கெட்டவைகளைப் பேசுவதால் ஏற்படும் தாக்கம், அழிவு பற்றி இந்த வசனம் நமக்குப் போதிக்கிறது.

கெடுதல் பேசுகிறதால் ஏற்படும் அழிவு போலவே, நல்லவைகளைப் பேசுகிறதால் ஏற்படும் ஆசீர்வாதம் பற்றியும் இதின் மூலம் நாம் தெரிந்துகொள்கிறோம். (யாக்கோபு 3:6). கெடுதல் பேசுவதால் முழு உடலும் தீட்டுப்படுகிறது; அதே நேரத்தில், நல்லவைகளைப்

பேசுவதால் முழு உடலுக்கும் ஆசீர்வாதம் கிடைக்கிறது. இதின் மூலம் நாம் முக்கியமாக தெரிந்துகொள்வது என்னவென்றால், நம்முடைய பேச்சு நம்முடைய முழுமையையும் பாதிக்கிறது. நாம் வாழும் வாழ்க்கையையே நம் பேச்சுதான் தீர்மானிக்கிறது. நம் வாழ்க்கை நம் பேச்சால் தீ வைத்துக் கொளுத்தப்படலாம். நாம் பேசும் பேச்சுகளின் தாக்கம் நம் வாழ்வைத் தீர்மானிக்கிறது.

கெடுதலைப் பேசுகிற பேச்சால் வாழ்க்கை தீவைக்கப்படுகிறது அதாவது, நரகத்தின் தாக்கம் இங்கு ஏற்படுகிறது. ஆனால், கடவுளுடைய வார்த்தையின் மூலம், அவரது ஆவியின் மூலம் பேசும் ஆசீர்வாதத்தின் பேச்சால், வாழ்வில் அபிஷேகமும், ஆசீர்வாதமும் பெறுகுகிறது. நம்முடைய பேச்சால் நம் முழு உடலும் ஆசீர்வாதம் பெறுகிறது. அதாவது, கடவுள் நம்மை ஆசீர்வதிக்க வைத்துள்ள நோக்கங்கள் திட்டங்களை நம் பேச்சின் மூலமாகவே நாம் துவக்குகிறோம். ஆகவே, நம்மைப் பற்றிய கடவுளின் நோக்கங்களை நாம் பேசுகிற வார்த்தையின் மூலமாகவே இந்த பூமியில் நாம் செய்கிறோம்.

ஆகவே, நாம் பேசுகிற பேச்சு அழிவுக்கு நேராகவோ, அல்லது ஆசீர்வாதத்திற்கு நேராகவோ நம்மை வழிநடத்துகிறது. நம்மைப் பற்றிய கடவுளின் நோக்கங்களை நம் பேச்சின் மூலமாகவே நாம் நிறைவேற்றுகிறோம். ஆகவே, நம்மைப் பற்றி கடவுளின் திட்டங்கள் மற்றும் நோக்கங்களை நாம் நிறைவேற்றி முடிப்பதற்கான வார்த்தைகளையே நாம் பேச வேண்டும். நம்மைக் குறித்த கடவுளைப் பற்றியவைகளையே நாம் பேச வேண்டும்.

உங்கள் உலகை நீங்கள் கடவுளுடைய வார்த்தைகளைப் பேசுவதன் மூலம் வடிவமைக்க வேண்டும்

எபிரெயர் 11:3
நாம் பார்க்கிற இந்த உலகம் சும்மா தானாகவோ அல்லது, ஏதோ ஒன்றிலிருந்தோ தோன்றவில்லை; மாறாக, கடவுள் பேசிய வார்த்தைகளாலேயே உருவாயிற்று என்று நாம் நம்புகிறோம்.

அதாவது, நாம் பார்க்கிற இந்த இயற்கை நம் கண்களுக்குத் தெரியாத ஆவியானவரின் சக்தியால் உருவாக்கப்பட்டது. கண்ணுக்குத் தெரியாதவற்றிலிருந்து, நம் கண்களுக்குத் தெரியும்படி இவைகள் உருவானது. கடவுள் பேசிய வார்த்தைகளின் மூலமாகவே, கண்ணுக்குத் தெரியாத ஆவி உலகில் இருந்து, நம் கண்களுக்குத் தெரிகிற இந்த இயற்கை உலகம் உருவானது. ஆகவே, நாம் பேசும் கடவுள் வார்த்தைகளே இதுவரை இல்லாத ஒன்றை உருவாக்குகிறது, பிறக்கச் செய்கிறது, வளரச் செய்கிறது, இயற்கையில் ஒரு உருவத்தைக் கொடுக்கிறது. அதாவது, கடவுள் வார்த்தைகளைப் பேச அவர் நமக்கு அதிகாரத்தையும் திறமையையும் அளித்துள்ளார். அதின் மூலமாகவே, நம் வாழ்வில் அவர் நிறைவேற்ற விரும்புகிறதை நாம் பெறுகிறோம்.

ஆகவே, உங்களைப் பற்றிய கடவுளின் கனவுகள், திட்டங்கள் மற்றும் நோக்கங்களை உங்கள் வாழ்வில் அடைய அவருடைய வார்த்தைகளைப் பேசுங்கள்.

5. கடின உழைப்பு

நீதிமொழிகள் 10:4
சோம்பற்கையால் வேலைசெய்கிறவன் ஏழையாவான்; சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்.

நீதிமொழிகள் 13:4
சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது; ஜாக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்துமாவோ புஷ்டியாகும்.

1 கொரிந்தியர் 15:10
ஏனெனில், கடவுள் என்மீது தயவு காட்டியபடியாலே, அப்போஸ்தலனாக அவருக்கு வேலை செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்துள்ளது. ஆனாலும், அவர் என்மீது காட்டிய தயவு வீணாகப் போகவில்லை. ஏனெனில், மற்ற அப்போஸ்தலர்களைவிட கடினமாக நான் வேலை செய்தேன். ஆனாலும், நானாக அவ்வாறு செய்தேன் என்று சொல்ல முடியாது; மாறாக, அவர் தயவு எனக்குக் கிடைத்தபடியால்தான், எனக்கு அப்படிக் கடினவேலை செய்ய முடிந்தது.

ஒருவர் தன்னுடைய கனவுகளை நனவாக்க வேண்டுமானால், அவர் கண்ணீர் விடவோ, வியர்வை சிந்தவோ, ஏன் இரத்தம் சிந்தக்கூட தயங்காமல் உழைக்க வேண்டும். அதுபோலவே, நம்மைப் பற்றிய கடவுளின் நோக்கங்களை நம் வாழ்வில் அனுபவிக்க கடின உழைப்பு மிக அவசியம்.

கஷ்டப்பட்டு கண்ணீர் சிந்தி, பயிரிட்ட விவசாயி; சந்தோசத்தோடு அறுவடை செய்துகொண்டு வருவார். (சங்கீதம் 126:5). பயிரிடும்போது கஷ்டப்படத் தயாராக இல்லாதவர்களால், ஒருபோதும் மகிழ்ச்சியில் அறுவடை செய்ய முடியாது. கடவுள் தரிசனங்களையும், கனவுகளையும் நமக்குக் கொடுத்து இருக்கலாம், ஆனால் அதை நடைமுறையில் பார்க்க

வேண்டுமானால், அர்ப்பணிப்பும், விடாமுயற்சியும் பல போராட்டங்களையும் சந்தித்தே ஆகவேண்டும். ஒரு செங்கலை எடுத்து இன்னொன்றின்மீது வைத்துக்கட்டும்பொழுது, புயல்வீசி சில செங்கல்களை வீழ்த்தக்கூடும். ஆனாலும், நாம் கீழே விழுந்தவைகளை மீண்டும் எடுத்துவைத்து மீண்டும் கட்டியெழுப்புவது போன்ற முயற்சிகள் நிச்சயம் வேண்டும். இவ்வாறாக, நம்மைக் குறித்த கடவுளின் நோக்கங்களை நம் வாழ்வில், நடைமுறையில் கொண்டுவர கடின உழைப்பு கட்டாயம் தேவை.

கடவுள் நம்மை வெறும் கனவு காண்பவர்களாக இருக்க அழைக்கவில்லை; மாறாக, அவருடைய ராஜ்யத்திற்காக உழைக்கும் தொழிலாளர்களாக அழைத்திருக்கிறார். ஊழியத்தைப் பற்றி வெறும் கனவுகளை மட்டும் கண்டுகொண்டிருக்காமல், ஊழியம் செய்யவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். எல்லா சிரமங்கள், சவால்கள் மத்தியில் தொடர்ந்து கடினமாக உழைக்கும்பொழுது கனவுகள் நிச்சயம் நிறைவேறும்.

கடவுள் நம் ஒவ்வொருவரின் மூலமாகவும் தன்னுடைய சில நோக்கங்களை நிறைவேற்ற விரும்புகிறார் என்று நான் நம்புகிறேன். "ஆண்டவரே, நான் பெரியதாக கனவு கண்டேன்; ஆனால், நடைமுறையில் நான் எதையும் சாதிக்கமுடியவில்லை" என்று பரலோகத்திற்குப் போய்ச் சொல்ல வேண்டாம். இந்த பூமியில் நாம் இருக்கும்போதே, நம் மூலமாக கடவுள் செய்ய விரும்பிய அனைத்தையும் நாம் செய்து முடித்தவர்களாக அங்கு செல்ல வேண்டும்.

ஆல் பீபிள்ஸ் சர்ச் பங்காளர்களே

ஆல் பீபிள்ஸ் சர்சின் ஊழியர்கள் உள்ளூர் திருச்சபை என்ற எல்லையை கடந்து இந்தியா முழுவதையும், குறிப்பாக வட இந்தியா முழுவதையும் சென்றடைந்துள்ளனர். அவர்களின் முக்கிய நோக்கம், (அ)தலைவர்களை பலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களுக்கு ஊழியத்தில் விருப்பம் ஏற்படச் செய்தல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தை கட்டமைத்தல். மேலும் இளைஞர்களுக்கான பயிற்சி கருத்தரங்குகள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கான மாநாடுகள் ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. கூடுதலாக, பல ஆயிரம் புத்தகங்களின் பிரதிகள் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன, இது, வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகள் வளர உதவுகிறது.

ஒரு முறை உதவி அல்லது மாதாந்திர நிதி உதவி அனுப்புவதன் மூலம் நிதி ரீதியாக எங்களுடன் பங்காளராக உங்களை அழைக்கிறோம். நாடு முழுவதும் நாங்கள் செய்யும் இந்த வேலையில் எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பக்கூடிய எந்தத் தொகையும் பெரிதும் மதிக்கப்படும். உங்கள் உதவியை "ஆல் பீபிள்ஸ் சர்ச்" க்கு செலுத்த வேண்டியதை காசோலை / வங்கி வரைவு காசோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். எங்கள் வங்கி கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கி பரிமாற்றத்தின் ஊடாக உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

கணக்கு பெயர்: All peoples church
கணக்கு எண்: 0057213809
IFSC குறியீடு: CITI0000004
வங்கி: சிட்டி வங்கி என்.ஏ., எண் 5, எம்.ஜி. சாலை, பெங்களூரு, கர்நாடகா 560001

தயவுசெய்து கவனிக்கவும்: இந்தியாவை தளமாக கொண்ட வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஆல் பீபிள்ஸ் சர்ச்சால் ஏற்றுக்கொள்ள முடியும். உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, நீங்கள் விரும்பினால், உங்கள் பங்களிப்பு குறிப்பிட்ட எந்த APC ஊழிய பகுதிக்கு அல்லது இடத்திற்கு பயன்படுத்தப்பட விரும்புகிறீர்கள் என்பதை குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு apcwo.org/give என்ற இணையப் பக்கத்தை பார்வையிடவும்

மேலும், எப்போதுதெல்லாம் உங்களால் முடியுமோ எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்துக்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள். நன்றி, கடவுள் உங்களை ஆசீர்வாதிப்பாராக!

இலவச வெளியீடுகள்

A Church in Revival*
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks*
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change*
Code of Honor
Divine Favor*
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling*
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God*
God Is a Good God
God's Word
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife*
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses-Don't Take Them
Open Heavens*
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith *
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus *
The Night Seasons of Life
The Power of Commitment*
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power*
The Wonderful Benefits of speaking in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different*
Who We Are in Christ
Women in the Workplace
Work Its Original Design

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து புத்தகங்களும் இலவசமாக PDF -ஆக தரவிறக்கம் செய்ய எமது திருச்சபை வலைத்தளமான **apcwo.org/books** பார்க்கவும். இந்த வெளியீடுகள் வேறுபல மொழிகளிலும் உள்ளன. இவைகளை புத்தகவடிவில் இலவசமாகப் பெற எமது மின்னஞ்சல் அல்லது அஞ்சல் முகவரிக்குத் தொடர்புகொள்ளவும்.

எமது திருச்சபை வலைத்தளம் **apcwo.org**-ல் இலவச ஒலி, ஒளி வடிவில் பிரசங்கங்களைக் கேட்கலாம், பிரசங்க குறிப்புகளைப் படிக்கலாம், டெலிவிஷன் நிகழ்ச்சிகள், மேலும் பலவைகளால் நீங்கள் பயனடையலாம்.

ஆல் பீப்புள் சர்ச்சைப் பற்றி

ஆல் பீப்புள் சர்ச்சின் தரிசனம் பெங்களூர் பெருநகரத்திற்கு உப்பாக, ஒளியாக திகழவேண்டும் என்பதும், இந்திய தேசத்திற்கும், மற்ற தேசங்களுக்கும் கிறிஸ்துவைப் பற்றி குரல் எழுப்ப வேண்டும் என்பதாகும்.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தோடும், வெளிப்பாடுகளோடும் கடவுளுடைய வார்த்தையில் எந்தக்கலப்படமும் இல்லாமல், முழுமையாக அதை மக்களுக்குச் சொல்லும் அர்பணிப்போடு ஆல் பீப்புள் சர்ச் செயல்பட்டுவருகிறது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு, அற்புதங்கள், அதிசயங்கள், அடையாளங்கள், ஆவியின் வரங்கள் மூலம் கடவுளுடைய வார்த்தையை மக்களுக்கு அறிவிப்பதற்கு மாற்றாக, நல்ல இசையோ, புதுபுதுத் திறமைகளைக் காட்டி அறிவிப்பதோ, திறமையாகப் பேசுவதோ, நவீன கால ஊழிய உத்திகளோ மாற்றாக இருக்க முடியாது என்பது எங்கள் நம்பிக்கை (1 கொரி. 2:4-5; எபிரே. 2:3-4). எங்கள் கருப்பொருள் இயேசு கிறிஸ்து. மக்களுக்கு ஊழியம் செய்வது எங்கள் தலையாய நோக்கம், கிறிஸ்துவைப் போல வளர்ச்சியடைவதே எங்கள் நோக்கம்.

பெங்களூரை மைய்யமாகக்கொண்ட ஆல் பீப்புள் சர்ச்சிற்கு இந்தியாவின் பல இடங்களில் கிளை சபைகள் உள்ளது. தற்போது எங்கெங்கே கிளை சபைகள் உள்ளது என்பதை அறிய **www.apcwo.org/locations** என்ற வலைத்தளத்திலோ, **contact@apcwo.org** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவது மூலமாகவோ தெரிந்துகொள்ளலாம்.

கடவுள் உங்களை நேசிக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு, கடவுள் இவ்வுலகிற்கு ஒரு மனிதனாக வந்தார். அவர் பெயர் "இயேசு". அவர் ஒரு பாவமும் செய்யாத ஒரு பரிபூரண வாழ்க்கை வாழ்ந்தார். இயேசு என்ற பெயரில், கடவுள் ஒரு மனித உடலில் வாழ்ந்தபடியால், அவர் சொன்னது, செய்தது அனைத்தும் கடவுள் எப்படிப்பட்டவர்? என்பதை நமக்குக் காட்டியது. அவர் பேசிய வார்த்தைகள் அனைத்தும், கடவுள் பேசிய வார்த்தைகளாகும். அவர் செய்தவைகள் அனைத்தும், கடவுள் செய்த செயல்களாகும். இந்தப்புவியிலே, இயேசு அனேக அற்புதங்களைச் செய்தார். கஷ்டகளில், வியாதிகளிலிருந்து அனேகரை அவர் குணப்படுத்தினார். குருடான கண்களைப் பார்க்கச் செய்தார்; கேட்க இயலா செவிகளைக் கேட்கச் செய்தார்; நடக்க இயலா கால்களை நடக்கச் செய்தார்; அனைத்துவித வியாதிகளையும் குணமாக்கினார். பசியோடிருந்த ஆயிரமாயிரமானவர்களுக்கு, அற்புதமாக ரொட்டியைப் பெருகச் செய்து, வயிறார சாப்பிட செய்தார்; புயலை அடக்கினார் இவ்வாறாக அனேக ஆச்சரியமான காரியங்களைச் செய்தார்.

அவர் செய்த அனைத்து செயல்களுமே, கடவுள் நல்ல கடவுள் என்பதை நாம் புரிந்துகொள்ளச் செய்கிறது. மக்கள் நன்றாக, சுகமாக, சந்தோசமாக வாழவேண்டும் என்பதே கடவுளுடைய விரும்பம் என்பதையும் புரிந்துகொள்ளச் செய்தார். மனிதர்களுடைய தேவைகளை நிவிர்த்திசெய்வதே அவருடைய விருப்பமாகும்.

அப்படியென்றால், கடவுள் ஏன் மனிதனாக மாறி இவ்வுலகிற்கு வரவேண்டும்? இயேசு ஏன் இவ்வுலகில் வாழ வேண்டும்?

மனிதர்களாகிய நாம் அனைவரும் நம்மைப் படைத்த கடவுளுக்குப் பிடிக்காதவைகளைச் செய்து பாவிகளாகிப்போனோம். பாவத்திற்கான எதிர் விளைவுகளும் உள்ளது. கடவுளுக்கும், நமக்கும் இடையில் பாவமானது தொடர்புகொள்ள இயலாத் தடையாக இருக்கிறது. இவ்வாறாக, பாவம் நம்மையும், கடவுளையும் பிரிக்கிறது. பாவம், நம்மைப் படைத்த கடவுளோடு நாம் தொடர்புகொள்ள இயலாது, நாம்மால் அவரைப் புரிந்துகொள்ள இயலாது தடுக்கிறது. ஆகவே, அனேகர்கள் இந்தக் குறையைத் தீர்க்க வேறுபல வழிகளில் முயற்சி செய்கிறார்கள்.

பாவத்தினுடைய மற்றொரு விளைவு, நித்தியமாக கடவுளைவிட்டுப் பிரிந்து வாழ்வதாகும். கடவுளுடைய நீதிமன்றத்திலே, பாவத்திற்கான தண்டனை, மரணமாகும். மரணம் என்றால் நித்தியமாக அவரைப் பிரிந்து நரகத்தில் வாழ்வதாகும்.

ஆனால், நல்ல செய்தி என்பது, நாம் அந்த பாவத்திலிருந்து விடுபட்டு, கடவுளோடு தொடர்புகொண்டு அவரோடு சேர்ந்து வாழ இயலும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்" (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரிக்கும்பொழுது, இவ்வுலகின் பாவங்கள் அனைத்திற்குமான விலைக்கிரயத்தை செலுத்திவிட்டார். பின்பு, அவர் மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்திருக்கும்பொழுது, அவர் உயிரோடு இருக்கிறதை அனேகருக்கு காண்பித்து, பின்பு மீண்டும் பரலோகம் செல்கிறார்.

கடவுள் அன்பாகவும் இரக்கமாகவும் இருக்கிறார். எந்த மனிதனும் நரகத்திற்குச் செல்லவேண்டும் என அவர் விரும்புவதில்லை. ஆகவே, மனிதர்கள் அனைவரும் பாவத்திலிருந்து விடுபட்டு, பாவத்தின் விளைவுகளிலிருந்து காப்பாற்ற வழி ஏற்படுத்தவே, அவர் இந்த பூமிக்கு வந்தார். உங்களையும்,

என்னையும் போன்ற பாவ மனிதர்களை பாவத்திலிருந்தும், நித்திய அழிவிலிருந்தும் காப்பாற்றவே அவர் இப்புவிக்கு வந்தார்.

உங்கள் பாவத்திற்குரிய மன்னிப்பை இலவசமாக நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என வேதாகமம் கூறுகிறது. அது என்னவென்றால், நமக்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்ததை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

“அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்” (அப்போஸ்தலர் 10:43).

“என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்” (ரோமர் 10:9).

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களுக்காகச் செய்ததை நம்பி, அவரை நீங்கள் ஏற்றுக்கொள்ளும்பொழுது, நீங்கள் உங்கள் பாவத்திற்கு கடவுளிடம் மன்னிப்புப் பெற்று, உங்கள் பாவக்கறைகளிலிருந்து கழுவப்படுகிறீர்கள்.

இயேசு கிறிஸ்து, சிலுவையில் உங்களுக்காக என்ன செய்தார் என்று அவர் மீது உங்களுக்கு நம்பிக்கைவரும் தீர்மானத்தை எடுக்க பின்வரும் மாதிரி ஜெபத்தை நீங்கள் செய்யலாம். இயேசு கிறிஸ்து உங்களுக்காகச் செய்தவைகளை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள், அவருடைய மன்னிப்பையும், பாவக்கறைகளிலிருந்து சுத்திகரிப்பையும் பெற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவலாம். இந்த ஜெபம் நீங்கள் எப்படிச் ஜெபிக்கலாம் என்று உதவுவதற்கேயாகும். அதன்பின்பு, நீங்களே சொந்தமாக ஜெபிக்கலாம்.

என் வாழ்வை ஆளும் இயேசுவே! நீங்கள் சிலுவையில் எனக்காக என்ன செய்தீர்கள் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீங்கள் எனக்காக மரித்தீர்கள். நான் செய்த பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற, உங்களுடைய விலைமதிக்க இயலா இரத்தத்தைச் என் பாவங்களுக்கு விலைக்கிரயமாகச் செலுத்தினீர்கள். உங்களை நம்புகிறவர்களுக்கு, பாவங்களுக்கான மன்னிப்பு கிடைக்கிறது என்று வேதாகமம் கூறுகிறது.

ஆகவே, நீங்கள் எனக்காக சிலுவை மரணத்தின் மூலம் செய்தவைகளையும், மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்ததன் மூலம் செய்தவைகளையும் இன்று நான் நம்புகிறேன். நான் என்னதான் நல்ல செயல்களைச் செய்தாலும், என் வாழ்வை என்னால் காப்பாற்ற இயலாது என்பது எனக்குத் தெரியும். உங்களிடம் என் பாவத்திற்கான மன்னிப்பை பெற, என்னால் கொடுப்பதற்கு எதுவுமில்லை என்பதும் எனக்குத் தெரியும்.

நீங்கள் எனக்காக மரித்தீர்கள், என் பாவத்திற்கான விலையைச் செலுத்தினீர்கள்; மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தீர்கள் என்று இன்று நான் மனதார நம்புகிறேன்; இந்த நம்பிக்கையின் மூலம், நீங்கள் என்னை மன்னிக்கிறீர்கள், என் வாழ்வைச் சுத்தமாக்குகிறீர்கள் என்று வாயாற அறிக்கையிடுகிறேன்.
நன்றி இயேசுவே! உங்களைத்த தொடர்ந்து நேசிக்க உதவுங்கள். உங்களை மேலும் அறிந்து, உங்களுக்கு உண்மையாய் வாழ உதவுங்கள். ஆமென்.

All Peoples Church Bible College

apcbiblecollege.org

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீபிள்ஸ் சர்ச் பைபிள் கல்லூரி மற்றும் ஊழிய பயிற்சி மையம் (APC-BC), ஆவியால் நிறைந்து, அபிஷேகம் செய்யப்பட்ட, பரிசுத்த ஆவியின் அற்புத வல்லமையில் ஊழியம் செய்வதற்கான தயார்படுத்தல் மற்றும் மூல உபதேசத்தில் ஆழமான மற்றும் மேதமைத்துவத்தை வெளிப்படுத்தும்படி கடவுளுடைய வார்த்தையைப் படிப்பது. நாங்கள் நம்புவது என்னவென்றால், முழுமையான தேவ மனிதனாக ஒருவரை ஊழியத்திற்கு வளர்த்தெடுப்பது, கடவுளுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்ற செய்வது, மற்றும் அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களை நிகழ்த்துவது - இவை அனைத்தும் கடவுளுடனான நெருக்கமான உறவு மற்றும் பிணைப்பிலிருந்து தான் சாத்தியமாகின்றன என்பது தான்.

APC-BC இல் கூடுதலாக ஆழமான போதனைகள், கடவுளின் அன்பு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் இருப்பு மற்றும் கடவுளின் அற்புதங்கள் ஆகியவற்றை நிகழ்த்திக்காட்டுவதன் மூலம் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்கள் மற்றும் பெண்கள் தங்கள் வாழ்க்கையில் கடவுளின் அழைப்பை நிறைவேற்ற பயிற்சி அளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று படிப்புகளை வழங்குகிறோம்:

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியத்தில் ஒரு ஆண்டு சான்றிதழ் (C.Th.)
- இரண்டு ஆண்டு இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியத்தில் டிப்ளமோ (Dip.Th)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியத்தில் மூன்று ஆண்டு இளங்கலை (B.Th.)

ஒவ்வொரு வாரமும், திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9:00 **மணி** முதல் பிற்பகல் 1 **மணி** வரை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தினமும் வந்து செல்லும் மாணவர்கள், நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் மற்றும் இல்லத்தரசிகள் இந்த வகுப்புகளில் கலந்து கொள்ளலாம் மற்றும் பிற்பகல் 1 மணிக்குப் பிறகு உங்கள் அன்றாட பணியைத் தொடரலாம். தங்கி பயில விரும்பும் மாணவர்கள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனிதனி விடுதி வசதிகள் உள்ளன. வாரம் முழுவதும் ஒவ்வொரு நாளும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை மாணவர்கள் களப்பணி, சிறப்பு கருத்தரங்குகள், பிரார்த்தனை மற்றும் துதிஆராதனை அமர்வுகளில் பங்கேற்கின்றனர். பிற்பகல் அமர்வுகளில் தினம் வந்து செல்லும் மாணவர்கள் (குடியிருப்பு அல்லாத மாணவர்கள்) விரும்பினால் பங்கேற்கலாம், கட்டாயம் அல்ல. அனைத்து மாணவர்களும் வார இறுதி நாட்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உள்ளூர் தேவாலயங்களில் சேவையாற்ற நாங்கள் அவர்களை ஊக்குவிக்கிறோம்.

ஆன்லைனில் விண்ணப்பிக்க மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், தகுதிகள், கல்விச் செலவுகள் பற்றி தெரிந்துகொள்ள மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்குவது பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, தயவுசெய்து எங்கள் இணைய பக்கத்தை பார்வையிடவும்: apcbiblecollege.org

APC-BC is accredited by the Nations Association for Theological Accreditation (NATA).

DOWNLOAD THE FREE APP!

Search for

"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play



A daily 5-minute video devotional.
A daily Bible reading and prayer guide.
5-minute Sermon summary.
Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.
Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.

IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!

தனது நோக்கங்களை பூமியில் கடவுள் நிறைவேற்ற விரும்பும்போது, சில நேரங்களில் தேவதூதர்களைப் பயன்படுத்தலாம்; ஆனால், பெரும்பாலான வேளைகளில், மனிதர்களையே பாத்திரங்களாகப் பயன்படுத்துகிறார். அதாவது, கடவுள் தன் நோக்கங்களை இந்த பூமியில், உங்களையும் என்னையும் போன்ற மனிதர்கள் மூலமாகவே நிறைவேற்றுகிறார்.

நீங்கள் கடவுளோடு உறவாடும்பொழுது, உங்கள் மூலம் அவர் இந்த பூமியில் நிறைவேற்ற திட்டமிட்ட அவருடைய நோக்கங்களையும் நீங்கள் புரிந்துகொள்வீர்கள். அவற்றில் சில மிக மிக முக்கியமான நோக்கங்களாக, திட்டங்களாக இருக்கலாம். உதாரணத்திற்கு, ஒரு கன்னிப்பெண் மூலம் கடவுளின் மகன் பிறந்ததைப் போன்றது. ஆனால், வேறு சில அவ்வளவு முக்கியமானதாக இல்லாதிருக்கலாம். உதாரணத்திற்கு, அனேகருக்குத் தெரியாத அளவில், ஒரு தொலைதூர கிராமத்தில் ஒரு நர்சரி பள்ளியை அமைப்பது போன்றது. ஆனாலும், ஒவ்வொன்றும் கடவுளின் நோக்கங்களை இந்த பூமியில் நிறைவேற்றுவதாகும்.

உங்களைப் பற்றிய கடவுளின் நோக்கங்களை இந்த பூமியில் எப்படி நிறைவேற்றுவது என்று இந்த புத்தகம் சில முக்கிய கருத்துக்களை கொண்டுள்ளது. ஆகவே, உங்கள் வாழ்விலான கடவுளின் நோக்கங்களைக் கண்டறிந்து, இந்த பூமியில் அவைகளை நிறைவேற்ற வாழ்த்துக்களுடன்...

ஆசீஸ் ராய்சூர்

All Peoples Church & World Outreach
319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617, +91-80-65970617
Email: contact@apcwo.org
Website: www.apcwo.org